09.03.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.116/2016**

**பி.வா.சா. 2–செந்தில்குமார், த/பெ.நாகராஜ்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் நான் 2 ம் பிரதிவாதி ஆவேன். 1 ம் பிரதிவாதி எனது தந்தை ஆவார். நான் இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி என்பதால் இவ்வழக்கின் முழு விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்து கோவில் சொத்திற்கு கிழபுறம் தான் எனது தகப்பனார் குடியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் குடியிருக்கும் சொத்து எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது. எனது தகப்பனார் அந்த நிலத்தை கிரையம் பெற்ற வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் கோவில் நிலத்திற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருமணம் செய்து கொண்டு எனது தாய் தந்தையுடன் வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை 2024 ம் ஆண்டு நான் கிரையம் பெற்றுள்ளேன். இவ்வாறு 2024 ம் ஆண்டு

09.03.2026



கிரையம் பெற்ற கிரைய ஆவணத்திலும் கிரைய சொத்தானது தாவா சொத்திற்கு வடபுறம் என நான்கெல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முந்தை கிரைய ஆவணத்தை பார்த்து அப்படியே எழுதிவிட்டார்கள். நான் தாக்கல் செய்த முதன்மை நிருபண வாக்குமூலம் 3ம் பிரதிவாதிக்காக சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு 3ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து தான் முதன்மை நிரூபண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ள விவரம் 3ம் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்துடன் 3 ஆவணங்களை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து கோவில் நிலத்திற்கு மேற்கில் தான் 3ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு 3 ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை ஆனால் வழக்கில் குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நாடார்கள் என்பது சாணார்கள் என்பதும் ஒரே இனத்தை தான் குறிக்கும் என்று சொன்னால் சரிதான். என்னுடைய குலதெய்வம் காமாட்சியம்மன் தெய்வம் தாவா கிராமத்தில் தான் உள்ளது. வாதியின் குலதெய்வம் கருப்பன் என்றால் சரிதான், அந்த சுவாமி தாவா சொத்தில்

தான் உள்ளது என்று சொன்னால் தெரியாது. நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள் அவர்களுடைய குடிப்படை பங்காளியிடம் அனுமதி பெறாமல் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் இ.ம.எண்.514/2016 என்ற மனுவில் நீதிமன்ற அனுமதி பெற்று தமிழ்சுடர் நாளிதழில் அறிவிப்பு செய்து தண்டோரா போட்டும் மேற்படி மனுவில் உத்தரவு பெற்று தான் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. துறையூர் கணம் சார்பு நீதிமன்றத்தில் CMA No.3/2017 என்ற வழக்கின் படி வாதிகள் சொத்தைப் பொறுத்து இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் அனுபவத்தை இடையூரோ, இடைஞ்சலோ ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என உத்தரவு பெற்ற விவரம் எனக்கு தெரியும். இவ்வாறு கணம் துறையூர் சார்பு நீதிமன்றத்தின் தடை உத்தரவை தெரிந்தும் கடந்த 24.07.2023 மதேதி பிரதிவாதிகள் நாங்கள் அனைவரும் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் காவல் துறையினர் அந்த முயற்சியை தடுத்து நிறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல, சம்பவத்தன்று வேறு சம்பவத்திற்காக காவல் துறையினர் வந்தார்கள். நான் முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு

09.03.2026



வாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமித்து ஆவணங்களை ஏற்படுத்த முயற்சி செய்வதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல உண்மை. வாதிகள் வருவாய் துறை ஆவணங்களை கோவிலின் பேரை சேர்ப்பதாக முயற்சி செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் ஒரு போதும் தனிப்பட்ட முறையில் வாதிகள் பெயரை கோவில் நிலத்தில் பட்டா மாற்றம் செய்யவோ வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவோ முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே தான் வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து கோவில் நிலத்தில் தற்போது வரை பல்வேறு வகையான பூஜைகள் நிகழ்வுகள் நடந்து வருகிறது என்றால் வழக்கு தொடர்ந்த பிறகு தான் நடந்து வருகிறது. அதற்கு முன்பு கிடையாது. வருவாய் துறை ஆவணங்களில் காலி மனை என இருப்பதால் எந்த வகையிலும் பயன்படாத மனை என சொல்லமுடியாது என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் தாவா நிலம் கோவில் என குறிப்பிடாததால் கோவிலுக்கு சொந்தமான நிலம் இல்லை என கூறமுடியாது என சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் சுமார் 90 ஆண்டுகளுக்கு மேலாக வாதிகளும் அவருடைய பங்காளிகளும் கிடா வெட்டி, பொங்கல் வைத்து

09.03.2026



வழிபட்டு வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தில் உள்ள சுவாமிகளை வாதிகளும் அவருடைய பங்காளிகளும் குலதெய்வ வழிபாடு செய்து வருவதால் வாதிகளுக்கு அனுபவ பாத்தியமும், உரிமை பாத்தியமும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தனிப்பட்ட முறையில் எந்த பரிகாரமும் கோராததால் அரசு அலுவலர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியப்படி வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.